Drinking water for Madras City from North Pennar river

* 598 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government had a scheme to bring drinking water to the City of Madras from North Pennar river and Somasila Project in Andhra Pradesh; and

(*b*) if so, why was it dropped?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) திட்டம் கைவிடப்படவில்லை.

திரு. கே. விநயகம்: ஸார், சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் சுற்றுப்புறத்தில் இருக்கிற ஆறுகளில் உள்ள தண்ணீரை வீராணத்திற்குக் கொண்டு வருவதைவிட, ஆந்திர சர்க்காருடன் கலந்து பேசி, வட பெண்ணையிலிருந்தும், சோமசிலா திட்டத்திலிருந்தும், தண்ணீர் கொண்டு வரலாம் என்ற திட்டம் நம்முடைய அரசாங்கத்திடம் இருந்தது. அது கைவிடப்படவில்லை என்றாலும் கூட, அதை எடுத்து நடத்துவதற்கு எவ்வளவு பணம் வேண்டியதாக இருக்கும்? எப்பொழுது அவர்களோடு கலந்து பேசி ஏதாவது செய்ய ஒரு குறிப்பு இருக்கிறதா? இதுபற்றி அரசாங்கம் என்ன முடிவுக்கு வந்திருக்கிறது? கைவிடப்படவில்லை என்று சொல்லிவிட்டால் மட்டும் போதாது. அதற்குப் பரிகாரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மூன்று மாநிலங்களுக்கும் இடையே கிருஷ்ணா நதியின் நீரைப் பகிர்ந்துகொள்ளும் சிக்கல் இறுதியாக முடிவடையாமல் இருப்பதினாலும், உடன்பாடான இறுதிமுடிவு எடுக்க இன்னும் சிலகாலம் செல்லும் என்ற காரணத்தினாலும், இதுபற்றி மேற்கொண்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்க இயலவில்லை. கிருஷ்ணா நதியில், கீழ்க்காணும் வகையில் மூன்று இடங்களில் ஏதாவது ஒன்றிலிருந்து 1,500 கோடி கன அடி நீரை எடுத்துக்கொள்வது குறித்து துவக்க அறிக்கை ஒன்றை அதற்கு ஆகக்கூடிய தோராய செலவு விவரத்துடன் பொதுச் சுகாதாரப் பொறியியல்—நகராட்சிப்பணிகள் தலைமைப் பொறியாளர், பாசனத் தலைமைப் பொறியாளரைக் கலந்து தயாரித்து அனுப்பியுள்ளார். அதன் விவரம் வருமாறு: நாகார்ஜுன சாகர் நீர்த் தேக்கத்திலிருந்து கிருஷ்ணா நதியைக் கடந்து தண்ணீர் கொண்டு வருதல். செலவு ரூ. 54·20 கோடி. ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலிருந்து கிருஷ்ணா நதியைக் கடந்து நீர் கொண்டுவருதல். செலவு ரூ. 61·25 கோடி. சுங்கசாலா அணைக்கட்டிலிருந்து துங்கபத்திரா நதியைக் கடந்து நீர் கொண்டு வருதல். செலவு ரூ. 59·00 கோடி.

THIRU K. S. KOTHANDARAMIAH: May I know from the Hon. Minister whether this Government have a proposal to bring water from Hogenakal Cauvery to Madras City via Chembarapakkam tank?

(பதில் இல்லை).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மகாதேவன் அவர்கள்......

திரு. ப. மகாதேவன்: சென்னை நகரத்திற்குக் குடிநீர் கொண்டு வருவதற்குத் திட்டம் தீட்டியதைப்போல கிராமப்புறங்களுக்கும் பக்கத்திலுள்ள அணைத் திட்டங்களிலிருந்து, இப்படித் தண்ணீர் கொண்டுவருவதற்கு அரசு முன்வருமா? உதாரணமாக......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வட பெண்ணையாற்றிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டுவருவது பற்றிய கேள்வி இது. இதைப் பற்றித் துணைக் கேள்வி கேட்கவேண்டும். திரு குமாரசாமி அவர்கள்....

1970 மார்ச் 30]

திரு. கே. என். குமாரசாமி : சென்னை நகரத்திற்கு வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டுவருவதற்கு ரூ. 20 கோடி அரசாங்கம் செலவு செய்திருக்கிறது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி வட பெண்ணையாற்றிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டுவருவது பற்றியது. வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டம் பற்றிய கேள்வியல்ல. வட பெண்ணையாற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவருவது பற்றிக் கேட்கவேண்டும்.

திரு. கே. விநாயகம் : இந்தத் திட்டத்தை இரு சர்க்காரும் சேர்ந்து போட்டு ஒரு மதிப்பீட்டிற்கு வந்தபிறகு, அந்தச் செலவை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆந்திர சர்க்கார் சொன்னதாகவும், அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற முறையில் அது விடுபட்டது. அப்படி வருகிற வழியில் அந்த ஆற்றுத் தண்ணீரைக் கொடுப்பதற்கு அவர்கள் யோசனை சொல்லியிருக்கிறார்கள். அதை வேண்டாம் என்று நமது சர்க்கார் சொல்லி, அதற்காகத்தான் இது தடைபட்டிருக்கிறதா ? இது பரிசீலிக்கப்பட்டு எப்பொழுது முடிவு எடுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னமாதிரி, கிருஷ்ணா, பெண்ணாறு நதிகளிலிருந்து சென்னை நகருக்குக் குடி தண்ணீரைக் கொண்டுவரவேண்டும் என்று ஏற்கனவே ஒத்துக்கொள்ளப்பட்டது. அதைக் குடி தண்ணீர் வசதிக்குப் பயன்படுத்திக்கொள்வதுபற்றிப் பரிசீலித்தது உண்டு. ஆனால் அதற்காக சோமசீலா திட்டத்தின்கீழ் ஒரு நீர்த்தேக்கம் கட்டவேண்டியிருக்கிறது. அதோடு நீர்ப்பாசன திட்டத்திற்கும் அதைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறார்கள். இதற்கு செலவு ஆகிற மொத்தப் பணத்தையும் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நடக்காத ஒரு யோசனையை ஆந்திர சர்க்கார் சொல்கிறார்கள். அவர்களுக்கு அதிக உற்சாகம் இல்லை. ஏனென்றால் அவர்களுக்கு பெரிய திட்டம், நாகார்ஜுனசாகர் திட்டம் இருக்கிறது. செலவைப் பகிர்ந்துகொள்ளும் பிரச்னை இருப்பதினால், அதில் காலதாமதம் ஏற்படும். காலதாமதம் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான், நாம் காவேரி நதித் திட்டத்தை மேற்கொண்டு இருக்கிறோம். இருந்தாலும், இன்னும் சென்னை நகரத்திற்குத் தண்ணீர் வேண்டியிருக்கிறது. இதற்காகத் தொடர்ந்து முயற்சி செய்து, ஒரு காலத்தில் இது வரலாம்.

திரு. எ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, சென்னைக் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க வேறு எதையும் பார்க்காமல் வடக்கே கொற்றலையாற்றிலிருந்து 'கலெக்ஷன் ஸிஸ்டம்'படி தண்ணீர் கொண்டுவரலாம் என்று பிரெஞ்சு நிபுணர் தெளிவான அறிக்கை கொடுத்திருக்கிறார்களே, அதைப்பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை.

இளநிலைப்பொறியாளர்கள்

* 599 வினா.—**திரு. ஆர். கருப்பையா:** }
திரு. எம். சுரேந்திர : } மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பணியாற்றும் இளம் பொறியாளர்களை அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களாக மாற்ற வேண்டுமென்று ஏதேனும் தகவல் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்பேரில் எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?